செய்தி வெளியீடு எண் : 17 நாள் : 19.11.2020

**தேனி மாவட்டம்**
**வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால்**
**மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் மற்றும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*******

வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட கண்டமனூர், க.மயிலாடும்பாறை ஆற்றங்கரைப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள், அம்பாசமுத்திரம், அரண்மனைப்புதூர் ஆகிய ஊராட்சிபகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.11.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக முல்லை பெரியாறு நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால் அவசரகால பணிகளை மேற்கொள்ள அனைத்து துறையினருக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆற்றங்கரைப்பகுதிகள், நீர்நிலைகளில் வசிக்கின்ற பொது மக்கள் கவனமுடனும், முன் எச்சரிக்கையுடன் இருக்கவும், விளையாடவோ, குளிக்கவோ, துவைக்கவோ மற்றும் வேறு காரணங்களுக்காகவோ நீர்நிலைகளுக்கு செல்ல வேண்டாமெனவும், சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாக வைத்திடவும் உள்ளாட்சி அமைப்பினரால் விழிப்புணர்வு ஏற்படுத்தபட்டு வருகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள **43** பகுதிகளை கண்காணிப்பு குழு அலுவலர்கள் மற்றும் வட்ட அளவிலான கண்காணிப்பு குழு அலுவலர்களை கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அவசர காலங்களில் வெள்ளம் மழையினால் பாதிப்புக்குள்ளாகும் மக்களை தங்கவைத்திட **66** தங்கும் இடங்களை தேர்வு செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை காலங்களில் வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்படும் போது பொது மக்களை மீட்க **195** நீச்சல் வீரர்களின் பட்டியல், தொலைபேசி எண்கள் **2** நாரிழை படகுகள் மற்றும் **117** பரிசல்கள், மீட்கக் கூடிய உபகரணங்கள், பொது மக்களை மீட்க **71** மாநில பேரிடர் மீட்பு பயிற்சி பெற்ற குழுவினர் கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்படின் அதற்கு தேவையான மருந்து பொருட்கள் மற்றும் உணவுப்பொருள்கள், பொதுமக்களுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள், அத்தியாவசியப்பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், காலி சாக்கு பைகள், சாலைகளில் விழும் மரங்கள் மற்றும் பாறைகளை அகற்றிட மர அறுவை இயந்திரம், ஜே.சி.பி போன்ற இயந்திரங்கள், மின் கம்பங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கண்டமனூர் ஆற்றில் அதிக அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், கண்டமனூர் பாலத்தில் கனரக வாகனம் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மழை, வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர் தொடர்பான தங்களது புகார்களை 1077 என்ற கட்டணமில்லா தொலை பேசி எண்ணிலும், 04546-261093 என்ற எண்ணிலும் தெரிவித்திடலாம்.

அம்பாசமுத்திரம் ஊராட்சியில் ரூ.9.36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 75,000 லிட்டர் கொள்ளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டி கட்டுமானப்பணி, அரண்மனைப்புதூர் ஊராட்சியில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 2 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டி கட்டுமானப்பணி ஆகியவற்றை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அண்ணாதுரை, செயற்பொறியாளர் எஸ்.கவிதா, வட்டாட்சியர் சந்திரசேகரன் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**